**பிப்ரவரி – 12**

# TNPSC துளிகள்

- கோயம்புத்தூரில் வையம்பாளையத்தில் விவசாயிகளின் தலைவரான நாராயணசாமி நாயுடுவின் சிலை மற்றும் மணி மண்டபத்தை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- சிறந்த ஆளுகைக்கான இந்தியாவின் தேசிய மையமும் (India's National Centre for Good Governance - NCGG) வங்க தேசத்தின் பொது நிர்வாக அமைச்சகமும் இணைந்து 1800 வங்கதேச குடிமையியல் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன.
- கிரேட் இந்தியன் பஸ்டார்ட் (கான மயில்) என்னும் பறவையை அடுத்த வருடம் குஜராத்தில் நடைபெற இருக்கும் இடம்பெயர் உயிரினங்களின் பாதுகாப்பிற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் (UN Convention on the Conservation of Migratory Species – CMS COP) 13-வது மாநாட்டிற்கான சின்னமாக மத்திய அரசு அறிவித்திருக்கின்றது. இம்மாநாடு உலக வனவுயிர் மாநாடு என்றும் அறியப்படும்.
    - இந்த சின்னம் மத்திய அமைச்சர் ஹர்சவர்த்தனால் வெளியிடப்பட்டதோடு அந்த அமைச்சகத்தால் அப்பறவை செல்லமாக "கிபி" என்று பெயரிடப்பட்டத் தகவலும் அவரால் வெளியிடப்பட்டது.
- "சட்டம், நீதி மற்றும் நீதித்துறை அதிகாரம் – நீதிபதி P.N. பகவதியின் அணுகுமுறை" என்ற மூல் சந்த் சர்மாவால் எழுதப்பட்ட புத்தகம் இந்தியாவின் தலைமை நீதிபதியால் வெளியிடப்பட்டது.
- உலக வங்கியின் தலைவர் பதவிக்கு டேவிட் மல்பாஸ் என்பவரை அமெரிக்க அதிபர் டிரம்ப் நியமித்திருக்கின்றார்.


# தமிழ்நாடு செய்திகள்

## வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களுக்கு சிறப்பு உதவி

- வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளது என்று வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 2000 ரூபாயைப் பங்கிட்டுக் கொடுக்கும் வகையிலான வறுமை ஒழிப்புத் திட்டத்தை தமிழக அரசு வெளியிட்டு இருக்கின்றது.
- குறிப்பாக விவசாய கூலிகள், நகர்ப்புற ஏழைகள், கட்டுமானம், மின்சாரம், விசைத்தறி, மீன்பிடித்தல், தீப்பெட்டித் தொழில் ஆகிய துறைகளில் உள்ள தொழிலாளர்கள் ஆகியோருக்கு இந்த திட்டம் உதவியளிக்கும்.
- இந்த உதவி மொத்தமாக 60 லட்சம் குடும்பங்களுக்கு, கிராமப்புறங்களில் 35 லட்சம் குடும்பங்களுக்கும் நகர்ப்புறங்களில் 25 லட்சம் குடும்பங்களுக்கும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இதற்காக அரசு 1200 கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது.
- முதலமைச்சர் கே. பழனிச்சாமி சட்டப் பேரவையின் விதி 110-ன் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

## தமிழ்நாட்டின் முதல் இரு கைகள் மாற்று அறுவை சிகிச்சை

- திண்டுக்கல்லைச் சேர்ந்த 29 வயதான நாராயணசாமிக்கு வெற்றிகரமான முதலாவது கைமாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவர் இறுதியாக சமீபத்தில் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.




- 2018-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தமிழ்நாட்டின் முதலாவது இரு கை மாற்று அறுவை சிகிச்சை 13 மணி நேர அளவிற்கு மேற்கொள்ளப்பட்டது.
- விபத்து ஒன்றில் பலியான, மூளைச் சாவு அடைந்த நபரிடமிருந்து பெறப்பட்ட ஒரு ஜோடி கைகளுடன் மருத்துவர்கள் நாராயணசாமிக்கு அவரது முழங்கைக்கு கீழே வைத்து மீண்டும் அவருக்கு இரு கைகளையும் பொருத்தினர்.

# தேசியச் செய்திகள்

## கிளர்ச்சிக் குழுவின் மீது தடை

- மத்திய உள்துறை அமைச்சகம், இந்தியாவில் தீவிரவாதத்தை ஊக்குவிப்பதிலும்

இளைஞர்களை தீவிரவாத நடவடிக்கைகளுக்காக வேண்டி அவர்களைத் தயார்படுத்தி ஆளெடுப்பதிலும் ஈடுபடும் தெஹ்ரீக்-உல்-முஜாகிதீன் அமைப்பை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (Unlawful Activities (Prevention) Act - UAPA) கீழ் தடை செய்திருக்கின்றது.

- இது 1990-ஆம் ஆண்டுகளில் காஷ்மீரின் விடுதலை என்ற நோக்கத்திற்குப் போராடுவதற்காக அமைக்கப்பட்டது என கூறிக் கொண்டு உருவாக்கப்பட்டது.

***சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்***

- இச்சட்டம் இந்தியாவில் தீவிரவாத அமைப்புகளின் பயங்கரவாதச் செயல்களைத் வேலைகளை திறம்பட தடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கின்றது.
- இதன் முதன்மையான நோக்கம், இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்கு எதிராக முடுக்கிவிடப்பட்ட நடவடிக்கைகளை கையாளும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதே ஆகும்.
- மேலும் இந்தச் சட்டத்தின்படி எந்தவொருப் பிரிவினைவாத இயக்கத்திற்கு ஆதரவளிப்பதும் இந்தியா தனக்கென்று சொந்தம் கொண்டாடும் பகுதிகளை வெளிநாட்டினர் உரிமை கொண்டாடும் போது அதற்கு ஆதரவளிப்பதும் குற்றமாகும்.
- 1967-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இச்சட்டம், 2008 மற்றும் 2012-ஆம் ஆண்டு ஆகிய இரு காலங்களில் திருத்தப்பட்டிருக்கின்றது.


## சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய நல மையங்கள்

- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (Pradhan Mantri Jan Arogya Yojana - PMJAY), சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் ஆகிய இரு துணைப் பிரிவுகளை ஆயுஷ்மான் பாரத் திட்டம் கொண்டிருக்கின்றது.
- 10.74 கோடி குடும்பங்களுக்கான ஒரு சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமான பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம் 2011-ஆம் ஆண்டு சமூக-பொருளாதார சாதிவாரியான கணக்கெடுப்பின் (Socio Economic Caste Census 2011 – SECC 2011) தரவுதளத்தின் மூலம் பயனாளிகளை அடையாளம் கண்டுள்ளது.

## தேசிய குடற்புழு நீக்கத்திற்கான தினத்தின் 8-வது சுற்றுப் பரப்புரை

- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் நாடு முழுவதும் தனது தேசிய குடற்புழு நீக்கத்திற்கான தினத்தின் 8-வது சுற்றை நடத்தியது.
- இத்தினம் குழந்தைகளின் மத்தியில் குடலில் ஒட்டுண்ணி புழுக்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு எண்ணுகின்றது.
- இது ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 10-ஆம் தேதியும் ஆகஸ்டு 10-ஆம் தேதியும் நடத்தப்படுகின்றது.
- இத்தினத்தின் நிகழ்ச்சியன்று 1 முதல் 19 வயதிற்குட்பட்ட பிரிவில் இருக்கும் பள்ளி செல்லும் குழந்தைகள் மற்றும் பாலர் பள்ளி செல்லும் குழந்தைகள் ஆகியோருக்கு அல்பென்டாசோல் மாத்திரைகள் வாய் வழியாக கொடுக்கப்படும்.
- உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி, 14 வயதிற்கு உட்பட்ட பிரிவில் 64 சதவிகித இந்திய மக்கள் இத்தகைய தொற்றுநோய்கள் தாக்கும் அபாயத்தில் இருக்கின்றனர்.

- இந்த சுற்றின் போது ஏறக்குறைய 24 கோடி குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் சிகிச்சையளிக்கப்படுவர்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை ஹெலினா

- ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் உள்ள சந்திப்பூரில் ஒருங்கிணைந்த சோதனைப் பகுதியில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் ஏவப்படும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையான ஹெலினா வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
- ஹெலினா-1 உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுத் தயார் செய்யப்பட்ட ஒரு ஏவுகணை அமைப்பாகும். இது உலகிலேயே மிகுந்த மேம்படுத்தப்பட்ட பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களில் ஒன்றாகும்.
- 4 கிலோ மீட்டர்கள் என்றளவில் வரையறுக்கப்பட்ட வரம்புடன் நாக் என்ற பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை பொருத்தப்பட்ட, ஏவியவுடன் காணாமல் போகும் ஏவுகணையின் ஆகாய மார்க்கமாக செலுத்தப்படும் வடிவமே இதுவாகும்.
- இதன் வரம்பு 7 முதல் 8 கிலோ மீட்டர் தூரம் வரையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




## ஏர் இந்தியா ஒன் – ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள்

- அரசின் தலைவருக்கான ஆகாய விமானமான இரண்டு போயிங்-777 விமானத்திற்கு இரண்டு மேம்படுத்தப்பட்ட ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை விற்பதற்கு அமெரிக்கா ஒத்துக் கொண்டிருக்கின்றது.
- இந்த இரண்டு ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் மிகப்பெரிய அகச்சிவப்பு எதிர்ப்பு முறைகள் கொண்ட விமானம் (Large Aircraft Infrared Countermeasures - LAIRCAM) மற்றும் சுய பாதுகாப்பு கொண்ட தொகுப்புகள் என்பதாகும்.
- LAIRCM என்பது மனிதனால் தூக்கி ஏவக்கூடிய ஏவுகணைகளிலிருந்து மிகப்பெரிய விமானத்தைப் பாதுகாக்கும்.
- LAIRCM அமைப்பு விமான இயக்குக் குழுவின் எச்சரிக்கைக்கான நேரத்தை அதிகரிக்கும், தவறான எச்சரிக்கை மணி விகிதங்களை குறைக்கும் மற்றும் தானாகவே மேம்படுத்தப்பட்ட இடைநிலை வரம்பு ஏவுகணை அமைப்புகளை எதிர்க்கும்.
- இது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய தலைவர்கள் பயணம் மேற்கொள்ளும் விமானங்களின் பாதுகாப்பை மேம்படுத்தும்.

# மாநிலச் செய்திகள்

## அருந்ததி திட்டம்

- மணப்பெண்களுக்கு இலவசமாக தங்கத்தை வழங்கும் வகையில் அசாம் மாநில அரசு அருந்ததி எனப்படும் புதிய திட்டத்தை அறிவித்திருக்கின்றது.
- இத்திட்டத்தின் கீழ் அசாம் அரசு, திருமணத்தின் போது தங்கம் கொடுக்கின்ற வழக்கத்தைக் கொண்ட அசாமின் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கும்

10 கிராம் (1 டோலா) தங்கத்தை அளித்திட எண்ணுகிறது.

- இத்திட்டம் மிகப்பெரும் முனிவர் பசிஷ்தாவின் மனைவியான அருந்ததி என்பவரின் பெயரால் வழங்கப்பட்டிருக்கின்றது.
- இத்திட்டம் வருடத்திற்கு 5 லட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருமானம் உடைய, பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு மட்டும் அளிக்கப்படவிருக்கின்றது.

## ஆற்றுத் தகவல் அமைப்பு


- கங்கை நதியின் மீது சரக்குப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, பராக்கா மற்றும் பாட்னாவிற்கு இடையே ஆற்றுத் தகவல் அமைப்பின் இரண்டாவது பகுதியைத் துவக்கி வைத்தார்.
- இந்த அமைப்பின் 2-வது பகுதி மேம்படுத்தப்பட்ட மற்றும் நிகழ்நேர தகவல் பரிமாற்றத்தின் மூலம் கரையில் இருக்கும் மையங்களுக்கும் நடமாடும் கப்பல்களுக்கும் இடையே துரிதமான மின்னணுத் தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்தும்.
- இந்தப் பிரிவு
    - துறைமுகங்கள் மற்றும் நதிகளில் உள்நாட்டுப் பயணப் பாதுகாப்பை மேம்படுத்துதல்
    - உள்நாட்டு நீர்வழிப் பாதைகளின் சிறப்பான பயன்பாடு
    - சுற்றுச்சூழல் பாதுகாப்பு

  ஆகியவற்றிற்கு உதவிடும்.
- இந்த அமைப்பு மத்திய கப்பல் அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகின்ற சட்டப்பூர்வ அமைப்பான இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பின் கீழ் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கப் படுகின்றது.

# முக்கிய தினங்கள்

## அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் – பிப்ரவரி 11

- அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 11-ஆம் தேதி அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த வருடம் "உள்ளடங்கிய பசுமையான வளர்ச்சிக்காக அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் வளர்ச்சிக்கு முதலீடு செய்தல்" என்ற கருத்துருவுடன் அனுசரிக்கப்பட்டது.
- யுனெஸ்கோ, ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு மற்றும் சர்வதேச தொலைத் தொடர்பு (International Telecommunication Union - ITU) ஒன்றியம் போன்ற பல்வேறு ஐக்கிய நாடுகள் அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் ஒரு கூட்டு முயற்சி இந்த நிகழ்ச்சியாகும்.


International Day of
Women and Girls in Science
February 11
"Investment in Women and Girls in Science
for Inclusive Green Growth"